1978 ஆகஸ்ட் 31]

திரு ரா. உமாநாத் : தலைவரவர்களே, அரசியல் சட்ட திட்டத்தில் ''ஈக்குவாலிடி பிபோர் லா'—எல்லா பிரஜைகளையும் சமமாக பாவிக்க வேண்டும் என்று இருக்கிறபோது, இத்தனை மணி வரையில் தான் ஒலிபெருக்கிகள் வைத்துக்கொள்ளலாம் என்று பிரஜைகளுக்கு மட்டும் கட்டுப்பாடு வைத்திருக்கிறபோது, இந்தக் கோவில்களுக்கு மட்டும் இந்தக் கட்டுப்பாடு கிடையாதா ? நான் சீரியஸ்ஸாகக் கேட்கிறேன். இரவு $2\frac{1}{2}$ மணிக்கு 3 மணிக்கு ஒலிபெருக்கி போட ஆரம்பிக்கிறார்கள். அது ஆயிரக்கணக்கான பிரஜைகளின் தூக்கத்தைக் கெடுக்கிறது. ஆகவே, நான் உண்மையிலேயே சீரியஸ்ஸாகச் சொல்கிறேன், எனக்கு பிரஜை என்ற முறையில் மறுக்கப்படுகிற உரிமை சாமிக்கு மட்டும் கொடுக்கப்படுகிறதே, அது ஏன் ? நம்முடைய அரசியல் சட்டத்தில் ''டு கிளாஸஸ் ஆப் சிடிஸன்'' என்ற நோக்கம் சொல்லப்படவில்லை. ஆகவே, இந்தப் பாகுபாட்டை ரத்து செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்களின் கேள்விக்கு அறநிலையத் துறை முன்பே அதற்கான விதிமுறைகளை வகுத்து வைத்து இருக்கிறது. பொதுமக்களுக்கு எந்த அளவிற்கு அனுமதி அளிக்கப்படுகிறதோ அதே அளவிற்குத்தான் பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. காலை 9 மணி முதல் இரவு 10–30 மணி வரை ஒலி பரப்பலாம். ஒரே நேரத்தில் சேர்ந்தாற்போல் 3 மணி நேரத்திற்கு மேல் பயன்படுத்தக்கூடாது. ஏதாவது சிறப்பு நாட்களில் சிறப்பு அனுமதி பெற்றால் ஒழிய இந்த ஒலி பரப்புகள் விதிக்கப்பட்டுள்ள நேரத்திற்கு அப்பால் அனுமதிக்கப்படுவது இல்லை. ஆகவே இந்திய சட்டத்திற்கு முன்னால் பக்தர்களும் ஒன்றுதான், பக்தி இல்லாதவர்களின் நிலையும் ஒன்று தான் என்பதை இந்த அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி மத்திய சிறைச்சாலையிலுள்ள நூலகம்.

*வினா 11— திரு என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

திருச்சி மத்திய சிறைச்சாலையிலுள்ள நூலகம் தற்போது செயல்படவில்லை என்பது உண்மையா?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR : It is not true to say that the library in the Central Prison, Thiruchirappalli is not functioning at present.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வேலை செய்யவில்லை என்று சொல்கிறார்களா? (சிரிப்பு) தலைவரவர்களே, திருச்சி மத்திய சிறைச்சாலைக்கு அமைச்சரவர்கள் சமீபத்தில் சென்றிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அங்கே செயல்பட்டு வந்த நூலகம் தற்போது செயல்படவில்லை என்பது உண்மை. எனவே திருச்சி மத்திய சிறைச்சாலையிலே உள்ள நூலகத்தை இனிமேலாவது சிறப்பாக இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR : Already the Library has been functioning very well. Books are being issued to prisoners and the relevant registers are being maintained and, as such, there is no need for fresh functioning of this Library.

கோத்தகிரியில் சப் கோர்ட் அமைத்தல்.

*வினா 12.—திரு கே. உச்சி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் சப்கோர்ட் ஒன்று நிறுவும் திட்டம் ஏதும் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறுவப்படும்?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR :

(a) No, Sir.

(b) Does not arise.

திரு கே. உச்சி : தலைவரவர்களே, கோத்தகிரி பகுதியிலுள்ள மக்கள் சுமார் 30 மைல் தூரம் வந்து—பெரும்பகுதி நடக்க வேண்டியிருக்கிறது—குன்னூர் சப்கோர்ட்டுக்கு வரவேண்டியிருக்கிறது. அங்கே ஏராளமான கிராமங்கள் இருப்பதால் கோத்தகிரியில் ஒரு சப்கோர்ட் அமைக்க முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIYAR : This Government have all sympathies for the difficulties enunciated by the hon. Member, but there is, what is called, the Committee on Jurisdiction of Courts which had gone into the question of realignment of jurisdiction of various civil and criminal courts. This Committee of the High Court has not made any recommendation for the constitution of a Sub-Court at Kotagiri. The hon. Member is requested to make representations to the High Court.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS